# காரைநகர் அருள்மிகு திக்கரை முருகன் புகழாரம்



ஓம்

# காரைநகர்
# திக்கரை முருகன்
# புகழாரம்

## சிவயோகச் செல்வர்
## த.சாம்பசிவம்


வெளியீடு

திருமதி.கமலம் சண்முகம்

வளுப்போடை களபூமி

காரைநகர்.

27.01.2008



# ஓம் சரவணபவ

உருவா யருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

ஓம்



# சமர்ப்பணம்

புகழாரம் சூட்டுவதற்கு

அகமகிழ்ந்து வாழ்த்துரைத்த

இகம்மறவா அறநெறியாளன்

மகேஸ்வரனின் ஆத்மா சாந்தியுற

எக்கணமும் எம்மைக் காத்தருளும்

திக்கை முருகன் திருவடிக்கிந்த

பாமாலையை சமர்ப்பணம் செய்கிறோம்.

அன்புடன்

திருமதி.கமலா சண்முகம்

## வெளியீட்டுரை
x - x - x - x - x

எம்மை வழிநடத்தி எக்கணமும் காக்கும் ஆடலரசன் உகந்த ஆடு மயிலேறி வரும் அயில் வேலன் திக்கரை முருகன் திருவடி நிழலைப் பெற எத்தனை எத்தனை கோடி அருட்பாடல்களை மெய்யடியார்கள் தூவினர். தூவியேத்திய அத்தனைக்கும் அவன் அகமகிழ்ந்து அருளியது போல் இச்சிறுதுளி முருகன் புகழாரத்தையும், சண்முகன் ஏற்றருள்வான் என்பது எம் அசையாத நம்பிக்கை.

எம்தாய் கமலம் சண்முகம் திக்கரை முருகா என்றே துளிப் பொழுதும் சொல்வது வழக்கம். தாயவள் முருகன் மேல் கொண்ட பற்று சிவயோகச் செல்வர் ஐயா மூலம் புகழாரமாய் உங்கள் முன் பரந்துள்ளது. விசித்திரமான, அடக்கம் மிகுந்த ஐயாவின் உள்ளப் பக்குவம் தெள்ளுத் தமிழாக உள்ளத்தை உருக்கும் பாசுரமாக திக்கரை முருகன் மேல்பாடப்பட்டடுள்ளது. அவர் பாடுவதற்கு துணை நின்றவனே முருகன்தான் என்பது நாமறிந்த உண்மை. இந்து சமயம் வாழத்தன்னை அர்ப்பணித்து வரும் ஐயாவின் திருத் தொண்டிற்கு இரங்கி பாடவைத்த முருகனே திருவருட் பொருளீந்து காப்பான். ஐயாவுக்கு எம்பணிவான நன்றிகள் நிறைவதாக.

புகழாரத்தைப் பாராட்ட முன்வந்து உரை தந்த இந்துக் கலாச்சார பணி செய்த எம் மண்ணின் காவலன், இன்று எம்மிடையே இல்லையே காலத்தின் கொடுமையா? காலனின் கொடுமையா? சகோதரர் தி.மகேஸ்வரன் ஈசன் நிழல் சார்ந்தார் என்பதை நினைத்தால் .........

என் செய்யலாம்? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். ஆனால், அவர் புகழாரத்தை வாசித்து வாசித்து வழங்கிய பாராட்டுரை இதில் இடம் பெறுவது நாம் செய்த பேறாகும். ஏனெனில் இதுதான் சோதரர் இறுதியாகச் செய்த இறையுரை திரு.தி.மகேஸ்வரன் அவர்களின் ஆத்மா சிவசாயுச்சம் பெற இறை தாழ் இறைஞ்சுகின்றோம்.

முருகன் புகழாரத்திற்கு வாழ்த்துரையீந்த மட்டக்களப்பு மாநகர

ஆணையாளர் திரு.மா.உதயக்குமார் அவர்கட்கும் அணிந்துரை தந்த சித்தாந்த புரவலர், சிந்தனைச் செம்மல் திரு.சு.சிவப்பிரகாசம் ஐயா அவர்களுக்கும் வாழ்த்துரையீந்த மட்/மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு.சீ.யோகேஸ்வரன். அவர்களுக்கும் புகழாரத்தை பொருள் உணர்ந்து ஆய்வுரை நல்கிய எமது மதிப்பார்ந்த புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன் அம்மாவுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

இப்புகழாரம் அனைவர் மனத்திலும் சூட அரும்பாடுபட்ட கிரி கொமினிகேஷன் உரிமையாளர் திரு.த.கிரிதரராஜா அவர்களுக்கும் புகழாரம் உருவாக தட்டச்சு செய்தளித்த செல்வி.S.மேரி கிறிஸ்ரி அவர்களுக்கும் எம் நன்றிகள். எம்மை ஆட்கொண்டு தம்பால் ஆரம் சூட வைத்த சண்முகப்பெருமான் இதனைப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் என்னருள் புரிந்து வேண்டுவன வழங்கி அருள்வானாக.

ஓம் முருகா சரணம்

**அன்புடன் ஆரம் சூடும்**
**திருமதி. கமலம் சண்முகம் குடும்பத்தினர்.**



# மகேஸ்வரனின் மனமார்ந்த பாராட்டு

மணிபல்லவத்தீவான இன்றைய காரைநகர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமகள் உலவும் பூமி, சிவபூமியெனப் பலராலும் போற்றப்படும் இவ்வூரில் முப்பதிற்கு மேற்பட்ட ஆலயங்கள் அருள்ஒளி பரப்புகின்றன. யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றில் கூறப்பட்டுள்ள துறை முகங்களில் ஜம்புகோளபட்டினம் மிக முக்கியமானது. ஜம்பு எனும் சொல்லிற்கு பலரும் பல பொருளுரைப்பினும் அச்சொல் சிவனைக் குறிப்பதென்பதே என் எண்ணம் அதுவே சிறப்பு மானதென்பது என் அசையாத நம்பிக்கை.

தமிழ் நாட்டில் திருச்சியில் ஜம்புலிங்கேஸ்வரர் ஆலயம் உண்டல்லவா? அதுபோல் அக்காலத்திலேயே இங்கு ஒரு சிவாலயம் இருந்துள்ளது என்பது ஆராய்ச்சியாளர் முடிவு. அவ்வாலயம் கடற்கோளினால் அழிவுற்றிருக்கலாம். ஆயினும் அவனருள் அம்பலவி முருகர் மூலம் அவனடி வணங்க நமக்கு கிடைத்தது அது அருள் ஒளி பரப்பும் ஈழத்துச் சிதம்பரம் என்றால் மிகையில்லை. அப்பெருமானின் அருளாட்சியோடு வேண்டுவார் வேண்டுவன அளிக்கும் அற்புத திருத்தலங்களுள் மூன்று முகப்பெருமானின் அருட்கடாட்சம் நிறைந்தவை.

களபூமியில் அமைந்துர்ள்ள திக்கரை முருகன் ......... வளம் செறிந்து செந்நெல் விளையும் வனப்போடு மிளிர்வது யாம் செய்த புண்ணியம் முன்னோர் வயல் மேட்டில் வேலைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். இன்றது வளர்ச்சியுற்று நலமும் வளமும் நல்கிறது.
1902 ஆண்டின் பின் இரண்டு குடமுழுக்கு விழாக்கள் நிகழ்ந்துள்ளது இத்திருக் கோயில் புனருத்தாரண வேலைகள் செய்யப்பட்டு 2008ல் இராஜ கோபுரத்துடன் கூடிய திருப்பெரும் ஆலயமாகி குடமுழுக்கு நிகழ்வு நடைபெறவுள்ளது. திருவருட் செயலால் திக்கரை முருகன் கோயில் இராஜகோபுரத்திற்கு அத்திவாரம் இடும் அருட்பணியை தொண்டனாகிய எனக்கு முருகன் ஈந்தானே அதை நினைக்கும் தோறும் என்ன புண்ணியம் செய்தனோ என்றென்னுள்ளம் பூரிப்படைகின்றது.

உண்மையில் யான் செய்த புண்ணியம் வெளிவரவுள்ள திக்கரை முருகன் புகழாரம் கண்டதுதான் அருள் நூலினை எளியேனின் இதயம் மணக்க செய்த முருகனின் கருணை என்னென்பேன். அவன் திருப்பதம் சேவிக்க மலர்ந்து வெளிவரவுள்ள புகழாரத்தை கட்டியுள்ளார். திருகோணமலை சிவயோகச் செல்வர் த.சாம்பசிவ சிவாச்சாரியார் திக்கரை முருகன் புகழாரத்திற்கு அடியேன் பாராட்டுரை எழுத வல்லனோ அறியேன். அலலேன் ஆயினும் வெல்ல வேல் துணையுண்டு என நம்பினேன். கண்ணில்லாத வரை எழுத வைத்தான் என்னையும் எழுத வைப்பான் அல்லவா?
ஈழத்திருநாட்டின் நடமாடும் சைவத்தமிழ் தொண்டனாக விளங்குபவர் சிவயோகச்செல்வர் த.சாம்பசிவ சிவாச்சாரியார் மறை ஞானம் திருமறை, ஞானம். திருப்புகழ் சிந்தனை மிக்க இவர் ஒரு கதாகாலட்சேப வித்தகர் அறிவு நிறைந்த ஐயா அவர்கள் தன்னை வெளிக்காட்டாது ஆடம்பரமற்ற

ஆத்மாவாக விளங்குகிறார் என்பதற்கு அவர் யாத்தளித்துள்ள காரைதிக்கரை முருகன் புகழாரம் ஆதாரமாகும். உண்மையிலேயே இப்பாடல்களை என்னுள்ளம் உணர்வு கலந்து வாசித்து வாசித்து அகமகிழ்ந்து மறுநாள் மட்டக்களப்பில் உள்ள நம்சகோதரர் சிவபாதசுந்தரத்திடம் ஐயா கோயிலுக்கு வந்துள்ளாரா? எனக்கேட்டதுதான் என் முதல் வினா? முருகனோடு ஒன்ற வைக்க வல்ல பாடல்கள் எப்படி உருவானது.

சிரித்தபடி சிவபாதசுந்தரத்தார் சொன்னார் ஐயா பல முறை ஈழத்துச்சிதம்பரத்தை தரிசித்தாரே தவிர முருகன் ஆலயத்திற்கு வரவில்லை அடக்கமான ஆன்மீகச் செல்வர் என்றார். அடக்கத்தின் வெளிப்பாடு ஐயா அவர்களின் அற்புதமான அருட்பாட்டு வரிகள் அருளாளர்கள் அக்காலத்தில் திருமுறைகளாகவும் கிருவாய் மொழிகளாகவும் பக்திப் புகழ் பாக்களாகவும் எப்படிப் பாடினாரோ என வியப்புறுவதுதானே நம் மண்ணக வாழ்வு.

"தன் சொல்லால் தானே தன்னைக்கீர்த்தித்த மாயன்" என தன்னைத்தானே பாடிக்கொள்வான் இறைவன் எனச்சொல்லும் ஆழ்வார் கூற்றுப்படி திக்கரை முருகன் சிவயோகச் செல்வர் தம் மனம் புகுந்து பாடியுள்ளான் என எண்ணத்தோன்றுகிறது.

பக்திச்சுவை துள்ள தன் எளிய சரளமான தமிழ் நடையில் கற்பவர், செவி மடுப்பவர் யாவரையும் இன்பத்தில் ஆழ்த்தியுள்ளார். இரக்க சக்தி ஒவ்வொரு பாடலிலும் உண்டு. திக்கை முருகன் வரலாற்றுப் பெருமையினையும் அயில் வேலின் அருட் திறனையும் அடியார்களுக் கருளிய அருமையையும் என் அப்பன் திக்கரை முருகன் ஐயா மூலம் ஈந்துள்ளான்.திருமதி கமலம் சண்முகம் அம்மாவின் ஆனந்தக்கனவு நனவாகியுள்ளது. இப்படைப்பினை பாரிலுள்ள அடியார்க்கு அன்போடு மணங்கமழும் மாலையாக கட்டி அழகுபார்க்க இதயம் கொண்ட சண்முகம் குடும்பத்திற்கு திக்கரை முருகன் எல்லா நலமும் வளமும் வழங்கப் பிரார்த்திக்கின்றோம்.

சிவத்தமிழ் நூலினை எமக்கு ஆக்கித்தந்த முத்தமிழரசு சிவயோகச் செல்வன் த.சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கட்கு முருகன் பேரருள் எப்போதும் நிறைக. ஐயா அவர்கள் இன்னும் பல அருள் நூல்களை இசைக்க கலியுகவரதனாகிய முருகனை மன்றாடி பிரார்த்திப்பதோடு ஐயா அவர்கள் எம்மூர்வத்து எம்பிரான் தம்பிரானை தரிசனம் செய்து நமக்கும் ஆசி நல்குமாறு வேண்டுகிறேன். எனக்கு பிடித்த புகழாரம்:-



சூரனை மாய்த்தாய் சூரர் தொழுநாயகா
வீரபாண்டியனின் விளையாட்டுப் பிள்ளையே
சீராளு திக்கரை உய்வித்த சேய்நீதனே
வாரமிகு தமிழினம் வாழவருளே.

அன்புடன்

**தி.மகேஸ்வரன்** (பாராளுமன்ற உறுப்பினர்)
கொழும்பு - 06

## அன்புரை

யாழ்ப்பாணம் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு நகரை வசிப்பிடமாகவும் கொண்ட வர்த்தகரும், தொண்டரும், மட்டக்களப்பு மாவட்ட இந்து வர்த்தகர் ஒன்றிய தலைவரும் ஆன்மீக பற்றாளனும், அறநெறி ஓங்க அயராது உழைப்பவனுமான "ஓம்" என்னும் பிரணவத்தை தினமும் ஓதுபவரும் "அண்ணாச்சி" என எல்லோரும் செல்லமாக அழைக்கும் சகோதரர் திரு.சிவபாதசுந்தரம் அவர்களால் காரைநகர் திக்கரை அருள்மிகு ஸ்ரீமுருகன் மேல் பாமாலை நூல் ஒன்று வெளியிடுவதை இட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

கலியுகத்தின் தலைவனாம் முருகப்பெருமானின் பெருமையை போற்றி புகழாரம் முதல் அபிடேகச் சிந்தாரம், தேர்ச்சிந்து என பல விடயங்களில் தலைதாங்கி வரும் இன்னூல் தெய்வீக உணர்வை சைவ மக்களிடையே ஏற்படுத்தும் என்பது வெள்ளிடை மலையாகும்.

இந் நூலை உருவாக்கிய எங்களது மதிப்புக்குரியவருமான சிவயோகச் செல்வன் சாம்பசிவம் சிவாச்சாரியான ஐயா அவர்கள் ஒரு ஆன்மீக பிரம்மச்சாரி அதே வேளை ஒரு சிறந்த கதாப்பிரசங்கியும் ஆவார். இவர் சங்கீதத்துறை, உட்பட பல ஆன்மீகத் துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர் அருள் திரு சுவாமி கெங்காதாரானந்தா அவர்களின் வளர்ப்புச் சீடராக இருந்து ஆச்சிரம வாழ்வை கடைப்பிடித்து தற்போது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் சைவ மக்களை, மேம்படுத்தும் முகமாக ஆன்மீக பிரச்சாரங்களை மேற்கொண்டு வருபவர். அதுமட்டுமின்றி சைவர்களின் உயிர் நாடியாக உள்ள பன்னிரு திருமுறைகளும், சைவ நாயன்மார்களும் சைவர்கள் வாழ்க்கையில் ஒளியேற்ற வழிசெய்து வரும் ஒரு பெரும் தொண்டர். எங்களது மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆன்மீக பணிக்கு பெரும் உதவி வழங்கி ஆலோசனை வழங்கி வரும் ஆன்மீக பொக்கிசமாவார். இப் பெருந்தகையால் இன்னூல் பாமாலைகள் உருவாக்கப்பட்டுள்ளமை சைவர்களான நமக்கு கிடைத்த பெரும் பேறெனை கூறவேண்டும்.

தில்லை நடராஜன் ஈழத்தில் குடிகொண்ட காரைநகரின் திக்கரையில் குடியமர்ந்து அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ திக்கரை முருகன் திருவருள் இப்பாமாலை பெற்று பக்தியுடன் ஓதும் அடியார்களுக்கு

கிடைக்க வேண்டுமென முருகப்பெருமானை பிராத்தித்து எங்கள் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை சார்பாக அன்புரையில் வாழ்த்துகின்றோம்.

"சைவமாக வாழ்வோம், சைவசமயம் காப்போம்"


சீ.யோகேஸ்வரன்
தலைவர்
மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை
மாவட்ட காரியாலயம், மாமாங்கம்,
மட்டக்களப்பு.

தொ.பே.இல : 077 6034559
060 2656608
065 2257527




## வாழ்த்துச் செய்தி

x - x - x - x - x - x - x

காரைநகர் அருள்மிகு திக்கரை முருகன் மேல் பாடப்பெற்ற ஸ்ரீமுருகன் புகழாரம், அபிடேகச் சிந்தாரம், தேர்ச் சிந்து, இனிய பாடல்கள் அடங்கிய இப்புத்தக உருவாக்க முயற்சிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக மகிழ்வெய்துகின்றேன்.

தனது வாழ்நாளில் தாம் வேண்டியவற்றை எல்லாம் வழங்கி அருள்பாலித்து காத்து நிற்கின்ற கந்தக் கடவுளின் நினைவாக அவரின் புகழ்பாடி, ஏனையோரும் அவரின் அருள் பெற வேண்டும். அருள் கடலில் நனையவேண்டும் என்ற அவாவிலே திருமதி.கமலம் சண்முகம் அம்மையாரது நல்ல சிந்தனையின் வெளிப்பாடாக இந்நூல் வெளிவருவது பாராட்டுக்குரியதாகும்.

துன்பம் வரும் வேளையில் மட்டும் இறைவன் துணைவர வேண்டும் என நினைப்பதும் அதன்பின் அந்நிலையில் இருந்து மாறிவிடுவது மனித இயல்பாக இருக்கின்ற இந்த வேளையிலே, வேண்டும் போதெல்லாம், வேண்டியோருக்கு வேண்டியதை அளித்து வினை தீர்த்த கருணைக் கடலான முருகவேளின் புகழ்பாடுவதற்காகவே இப் பாடல்கள் அமைந்துள்ளன.

மட்டக்களப்பு நகரில் சைவமும், தமிழும் மங்காப்புகழுடன் மணங்கமழ வேண்டும் என்ற பேரவாவுடன் வேண்டிய நிதி, பொருள், உடமுழைப்பு, என்பனவற்றை வழங்கி உதவும் நல்ல உள்ளங்களுள் திரு.ச.சிவபாதசுந்தரமும் அவரது சகோதரர்களும் முக்கியமான வர்களாவர். அவர்களுடாக அவர்களது அன்னையாரின் அன்பு வேண்டுதல் நிறைவேற இறைவன் அருள்பாலித்துள்ளார்.

இவ்வாக்கத்தினை இத்துறையில் சிறப்பு பெற்றவரும் இறைபணிக்காக தம்மை அர்ப்பணித்தவருமான சிவயோகச்செல்வன் த.சாம்பசிவம்

ஐயா அவர்கள் மிகச் சிறப்பாக யாத்திருப்பது இதற்கு மேலும் அணி சேர்ப்பதாக அமைந்திருக்கின்றது.

இம்முயற்சி மிகவும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களை வழங்குவதுடன் இம்முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் இறையருள் என்றும் கிடைக்கவேண்டி பிரார்த்திப்பதுடன், இப்பணி மூலம் மேலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இறையருள் பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வேலுண்டு வினை தீர்க்க
மயிலுண்டு எமைக்காக்க

மா.உதயக்குமார்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
மட்டக்களப்பு.



## அணிந்துரை
x - x - x - x - x

அருளமிர்தமாய் ஆனந்தம் அளிக்க வல்ல நகர் திக்கரை முருகன் புகழாரத்தை கட்டி அமைத்துள்ள சிவயோகச் செல்வன் உயர்திரு த.சாம்பசிவம் ஐயா அவர்களை கடந்த 20 வருட காலமாக, எம்முடன் மட்டக்களப்பு சைவத் திருநெறிமன்றத்தின் போஷகராக இணைந்து தொண்டாற்றியமையாலும், இம்மாவட்டம் எங்கும் அவரின் பல்துறைவாய்ந்த சமயப் பணிகளின் மூலமும் கதாப்பிரசங்கம் உபன்னியாசம் இசைத்துறை மூலமும் நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

தம்மிடம் இயற்கையாகவே இறையருளால் வாய்த்த திறனுடன் திருகோணமலை சுவாமி கங்காதரானந்தா அவர்களின் சீடனாக அமைந்தும், யாழ்ப்பாணம் யோக சுவாமிகளின் ஆசிகளையும் பெற்றுக் கொண்டமையாலும், வல்லமையை வளர்த்துக் கொண்டு தமது கவியாற்றல், இசையாற்றல், என்பனவற்றைப் பயன்படுத்தி, ''திக்கரை முருகன் புகழாரம்'' என்னும் நூலினை அருளிச் செய்துள்ளார். இந்நூலினை இலக்கியச் சுவையுடன் கூடிய ஒழுங்கமைப்பு, தெய்வீக உணர்வலைகளை மனதில் ஏற்படுத்தியதுடன் அன்னாரது புராண நூலறிவையும், வரலாறு சம்மந்தமான ''அரசறிவியலை''யும் எண்ணி எம்மை வியக்க வைத்துள்ளது.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் அன்புக்கு பாத்திரமான தொண்டரான ஐயா அவர்கள் திருவருளும், குருவருளும் துணை கொண்டு இறைபணியாற்றி வரும் இவர் பெற்றுக் கொண்ட பின்வரும் விருதுகளே சான்றாக அமைந்து நூலின் தகுதியைத் தெளிவு பெறச் செய்கின்றது. நல்லை ஆதீன குரு முதல்வர் ''சுவாமி நாத பரமாச்சாரியர்'' (மணி ஐயர்) ''சிவஹரிகதாவாரி'' என்ற விருதை வழங்கினார். மேலும் அவர் பெற்ற விருதுகளில் ''உபன்னியாசமணி'' ''முத்தமிழ் அரசு'' ''சைவப் புலவர்'' போன்ற பல சிறப்பு விருதுகள் பெற்ற விற்பன்னர் இவரை மிவ்வைற் சோப் ஸ்தாபனம் க.கனகரெத்தினம் அவர்கள் தமது 25வது ஸ்தாபன ஆண்டில்

சிவத்தமிழ் காவலர் என தங்க பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டமை சிறப்பாகும். இந்நூலில் ஆசிரியர் வழங்கியுள்ள எல்லாச் சுவைகளிலும் அன்னாரின் வரலாற்றறிவுத் தகவல்களின் சுவையே மேலோங்கி நிற்பதனை என்னால் அவதானிக்க முடிகிறது.

வெடியரசன் ஆண்ட களபூமி
நெடுமால்தேவி குபேரனொடு
அருளே புரியும் திக்கரையூரா

இவ்வாலயம் யாழ்ப்பாணம், காரை நகர் பிரதேசத்தின், களபூமி பகுதியுள்ள திக்கரையில் அமைந்துள்ளதாகும். பழந்தமிழ் நூல்களில் குஞ்சரகிரி, அசோதரம், சாகதீவு, காரை தீவு எனப் பற்பல பெயர்களில் குறிக்கப்பட்டிருக்கும் இப்பிரதேசம் 12.09.1923ம் ஆண்டில் காரைநகர் என இலங்கை அரசில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆதிகாலத்தில் துர்வாச முனிவர் அகத்திய முனிவர் போன்றோர் தவம் புரிந்ததும், மார்க்கோபோலோ என்ற மேல்நாட்டு யாத்திரீகன் முதன் முதலாக இலங்கைக்கு வந்திறங்கிய அழகிய கோவளம் துறைமுகத்தை தன்னகத்தே கொண்டிருப்பதுவும், குபேரன் இத்தீவின் சேனாதிபதியாக இருந்து ஆண்டமையும் இப்பிரதேசத்தின் சிறப்பம்சங்களாகும். இதனால் இன்றும் அவர்கள் குபேரர்களாக வாழ்கின்றனர். இன்று இராசாவின் தோட்டம் என அழைக்கப்படுகின்ற இடத்தில் காணப்படும் சிதைவடைந்த கோட்டையிலிருந்து ஆட்சி செய்த வெடியரசன், தனது காலத்தில் (கி.பி.1ம் நூற்றாண்டு) திக்கரையூடாக கரையிறங்கி வரும் பகைவர்களை களம் கண்ட பூமி இக்கள பூமி ஆகும். இதன் அருகில் உள்ள பலிகாடு என்னும் இடம் இம்மன்னர்களால் பலி செய்யும் இடமாக பயன்பட்டு வந்ததுவும் வரலாற்று உண்மையாகும். இச் செய்திகள் மூலம் நூலாசிரியரின் ''அரசறிவியல்'' நன்கு புலனாகின்றது.

"சீதாராமன் மருகோனே
நீதான் துணையென்றெழுவோர்க்கு
திருவடி நிலையில் நீராடி"

"மாருதி வால் தீ அணைத்த மாமாங்கத் தீர்த்தமாடி"

"அன்னைக்காய் இராவணனாக்கிய கன்னியா வென்நீர்த் தீர்த்தமாடி"

"காரை சிதம்பர நாதன் உதவிய சரவணன்"

எனப்பல சரித்திர தகவல்களை இணைத்துள்ளதன் மூலம் விடயங்களை விரிவுபடுத்தியுள்ளார். இங்கு குறிப்பிடப்படும் சிதம்பர நாதரின் தலம் கூட ஆதியில் களபூமிக்கு அருகிலுள்ள வியாவில் என்னும் இடத்தில் ஏழுவீதிகளுடன் கூடியதாக (கி.பி.1ஆம் நூ.ஆ) பிரமாண்டமானதாக அமைந்திருந்ததாகவும், அன்றைய காலத்தில் ஐயனாரை மூலவராகக் கொண்டு "ஈழத்துக்கயிலை" என அழைக்கப் பட்டதாகவும், இங்குதான் முதன் முதலில் இந்தியாவிலிருந்து பிராமணர்களை அழைத்து வந்து பூசைகள் செய்ததாகவும், போர்த்துகீசரின் படையெடுப்புக் காலத்தில் இந்து கோவில்கள் இடிக்கப்படும் சூழ்நிலையில், அவ்வூர் அடியவர்கள் பலர் இவ்வாலயத்திலிருந்த விக்கிரகங்களை இரவோடு இரவாக எடுத்துச் சென்று வடகாடு, சாம்பலோடையில் உள்ள வெங்காயக் குண்டுகளில் மறைத்து வைத்தமையும் சரித்திரம் கூறும் சான்றுகளாகும்.

இவை பின் கண்டு எடுக்கப்பட்டு இக் காலத்தில் ஈழத்துச் சிதம்பரம் எனப் பெயர்பெற்று சிறப்புடன் விளங்குகின்றது. காரைநகரிற்கான பாலம் அமைவதற்கு முன்னர் இக்கிராமத்திற்கான நுழைவாயிலாக அன்று பொன்னகரம் என அழைக்கப்பட்ட பொன்னாலையில் ஏழு வீதிகளுடன் அமைந்திருந்த வரதராஜப்பெருமாள் ஆலயம் அமைந்து அழகு சேர்த்ததுடன் இன்றும் திருவடி நிலப்புண்ணிய தீர்த்தத்தில் சுவாமி தீர்த்தம் ஆடுவதும் ஆதார பூர்வமானதாகும்.
சிவயோகச் செல்வர் ஐயாவின் முருகன் புகழாரத்தில் பழமை இளையோடி நடை போடுகின்றது. புதுமை பொலிகிறது. இந்நூல் பாச் சுவை ஒவ்வொன்றும் பாடப்பாட தெவிட்டாத இன்னமிர்தம் ஆகிறது. பாடல்களின் ஒவ்வொரு வரியும்

இறையுணர்வளிக்கும் இன்சுவை தமிழே

என்ற பழம்பாடல் வரிகளை ஞாபகம் ஊட்டுவன முருகன் புகழாரம்

மும்மலமாயைத்தீயினை தணித்து மனத்தை குளிர வைக்கின்றது.

கண் கொடுத்தாய் கொஞ்சிட

சேய் கொடுத்தாய் ............

பரிந்து கேட்க பிள்ளைவரமீந்து ... என்ற பாடல்கள் திக்கை முருகனின் அருட்திறனை வெளிக்காட்டுகின்றது. நமக்கு வரும் கொடிய நோய்பிணி மாற்ற வல்லவன் திக்கை வேலன் என உணர்ந்த பாடலாசிரியர்.

கடுஞ் சுரம் தொய்வு ....................

எனும் அற்புதப் பாடல் மூலம் முருகனை வா கா என அமைப்பது அவரது பக்தியின் திறன் எனலாம்.

இப்படி இந்நூலின் கண்ணுள்ள அபிடேகச் சிந்தாரம், தேர்ச்சிந்து ஆகியன கிராமிய நாட்டார் சிந்தின் வடிவாய் இலங்குவது தேனினும் இனிய இன்பச்சுவையே.

எனவே இந்நூலை பக்தி பரவசத்துடன் உள்ளம் உவகை கொள்ள கற்பதன் மூலம் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுக் கொள்வதுடன், ஆசிரியரையும் பெருமைப்படுத்துவதாக இந்நூல் அமைகின்றது. இராமரின் இலங்காபுரியை வட இலங்கையின் திருவடி நிலையின் ஊடாக வந்து இறங்கிப் பாதம் பதித்த இடம் திருவடி நிலை என்றும் இலங்காபுரியில் இருந்து புறப்பட்ட இடம் கிழக்கிலங்கையின் மாமாங்கேஸ்வரர் இடமும் ஆகையால் இன்றும் இந்துக்கள் ஆடி அமாவாசை, மாசிமாத அமாவசைகளில் பிதிர்கடனுக்காகப் புண்ணிய தீர்த்தமாடுகின்ற சரித்திர சமூகச் சமய உண்மைகளையும் இந்நூல் தாங்கி நிற்பதும் சிறப்பானதாகும்.

இல.சின்னலெவ்வை வீதி,
மட்டக்களப்பு.
065 2223234

சு.சிவப்பிரகாசம்,
சித்தாந்த வித்தகர் சிந்தனைச் செம்மல்,
சைவநெறிக்காவலர், மட்டக்களப்பு,
சைவத்திருநெறி மன்ற உபதலைவர்.

## ஆய்வுரை

x - x - x - x

சிவயோகச் செல்வர் சாம்பசிவம் காரைநகர் திக்கரை அருள்மிகு அழகன் முருகனுக்கு பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட பாமாலை பாடியுள்ளார். அவ் அருட்பாக்கள் அருணகிரிநாதரின் திருப்புகழ் சந்த ஓசையை எழுப்புகின்றன.

பாடல் ஆசிரியர் கருணைக்கடல் கந்தன் பெருமையை அழகு உணர்ச்சியோடும் கற்பனை வளத்தோடும் திறம்பட நயம்படப் பாடியுள்ளார். பக்திப்பிரவாகம் பெருக்கெடுத்தோடும் பாடல்களில் ஆறுபடை முருகன் அருளாட்சி செய்கிறார். முருகனின் அழகு, இளமை, புராண வரலாறு அக்கவிதைகளில் நடம் செய்கின்றன.

கவிஞர் யாப்புக்கு கட்டுப்பட்டு தனது இறை அநுபூதியை வெளிப்படுத்துகின்றார். கவிஞனின் ஆன்மீக உணர்ச்சி வெளிப்பாடுகளும், சொற்களும், ஓசையும் ஒத்து நடக்கின்றன. கவிதைகள் எளிமையான இனிமையான இலகு நடையில் அமைந்துள்ளன. அனைவரும் படித்து இன்புறும் முறையில் அமைந்துள்ளமை பாவலரின் வித்தகமான கைவண்ணமாகும் கவிதைகள் உயிரோட்ட நடையில் துள்ளு நடையில் செல்கின்றன. ஆசிரியர் கையாண்ட அணிகள் புதுமையானதாகவும் பொருத்தமானதாகவும் அமைந்துள்ளன.


கவிஞர் திக்கரை முருகனுக்கு ஐம்பத்தொரு பாக்களால் புகழாரமாக மாமாலை சாத்தியுள்ளார். வளம்தரும் வள்ளல் முருகனை வாழ்த்தி வணங்கி வரலாறுகள் கூறி முருகனடியார்கள் வரம்பெறும் வழியைக் காட்டும் திறம் நக்கீரர் அருளிய அழகிய திருமுருகாற்றுப்படையை நினைவூட்டுகிறது.

காரைநகர் அருள்மிகு திக்கரை முருகன் அபிடேகச் சிந்தும் மனிதப் பிறவியின் நோக்கத்தை வலியுறுத்தி நோக்கம் ஈடேற இறையடி காட்டுகிறது. நான் எனது அகங்கார மமகாரம் என்ற ஆன்மாவை

விட்டு நீங்க திருகோணமலை பாவநாச தீர்த்தம் திருக்கேதிஸ்வர பாலாவி தீர்த்தம் கதிர்காமம் மாணிக்க கங்கை தீர்த்தம், நகுலேஸ்வரம் கீரிமலைத் தீர்த்தம் அனைத்தாலும் முருகன் புனித நீராடுகின்றார்.

அழுதால் உன்னைப் பெறலாமே என் அழுதடியடைந்த அன்பர் மாணிவாசகப்பெருமானைப்போல அன்பரின் கண்ணீரால் முருகனை நீராட்டுகிறார். சித்தமலம் அறிவித்த உள்ளக் களிப்பு நீங்கிட முருகன் எள்ளெண்ணையால் நீராடுகிறார். அருளோங்க வாசிவிளங்கிட தேசி தோடை சாறால் நீராடுகிறார். மீண்டும் மீண்டும் கருவுற்றுப் பிறவாது நான் எனது என்ற மமதை அடங்க விளாம்பழச்சாற்றால் நீராடுகிறார். காமகாஞ்சனக் கொடுமை நீங்க தேமாங்கனிச் சாற்றால் நீராடுகிறார். ஐம்புலன்கள் ஒடுங்கிட பஞ்சாமிர்தத்தால் குளிர்த்து நீராடுகிறார். வள்ளியம்மை மணவாளனுடன் ஆன்மாக்கள் இசைந்து வாழ நறுந்தேனால் நீராடுகிறார். அனைவரும் அறமுடன் வாழ கரும்பு இளநீரால் முழுக்காடுகிறார். கலியுக நோய்கள் தீர்ந்திட மூலிகை நீரினால் முழுக்காடுகிறார். மாயை அகன்றி மனம் களிப்புற மங்களம் கருக்கொண்ட நாள் முதல் அன்பர்களைக் காத்திட திருநீற்றால் கடம்பனை முழுக்காடுகிறார். நாடு நலம் பெற நல்லாட்சி நடைபெறக் குங்குமத்தால் நீராடுகிறார்.

திக்கரை முருகன் திருமஞ்சனம் ஆடும் போது திருமஞ்சனப்பயன்களை தெளிவாக விளக்கி மக்கள் பயன்பெறும் வண்ணம் சிவாச்சாரியார் ஆற்றுப்படுத்துகின்றார். முருகன் அழகு, இளமை, வரலாறு . வாழ்த்து, போற்றி, வணக்கம் அபிடேக மகிமை அனைத்தும் திரண்ட வெண்ணெயாம் முருகன் புகழாரத்தை அள்ளி உண்போம். முருகன் அருள் வெள்ளத்தில் அருள் பெறுவோம்.



**திருமதி.புலவர் பூரணம் ஏனாதிநாதன்,**
**சின்னாலடி, காரைநகர்.**

## காரை நகர்
## அருள்மிகு ஸ்ரீ முருகன்
## புகழாரம்



உலகம்மையப்பலென ·வுணர்த்திய
'வலங்கை விநாயகா திக்கரை வாழ்
புலவன் முருகன் புகழ்பாடுதற்கு
பலமாகப்பதச்சீர் நிரை பொழிவாய்

அழகன் முருகற் கருந்துணையண்ணா
சுழகுக் காதா சரவணபவன்மேல்
எழுதும் பாடலொவ்வொன்றைய மேந்தி
முழுதாய் முடிய முன்னின்றருளே

உலகளந்தான் உதயாதிக்கரை
நில வளங்கள் பெருக்கு நிமலா
மல மொழிந்துன் மனதடங்கியென்
நல மோங்க நினதபயம் தாதா



உகர மூன்றுடை முருகா வுனது
நிகரில்வேலினை மறவா நினைவில்
வளரும் திக்கரை வளத்தால் துலங்க
குளகாவுன்கருணை விழி காட்டியாள்

வாழ்த்தி யேத்தி வணங்குமடியவர்
தாழ்த்தலற்று திறனுற வைப்பவன்
நீழ்த்த நேர்தலால் மிஞ்சு திக்கரையில்
வாழ்த்த வேகம்கெடுத்தாள வந்துளான்

சாமிநாதன் சந்தத் தமிழ்பிரியன்
ஓமின்ருபன் ஓங்காரமயில் வாசன்
வாமிமைந்தன் வரம்தருநாயகன்
காமி யாகா வண்ணம் காப்பனே



தண்தமிழருள்மொழி திறலனைதம்முள்
மண்டைய பகைகளை மாற்றியபோது
விண்ணவர் போற்றிய வரதனையின்று
கண்டனன்திக்கரை கோயிலின்கண்ணே



செய்வளம் ஓங்கிடும் திக்கரைச் சல்லாபன்
பெய்பதம் காலனை பிதுக்கிப்பெயர்க்கும்
உய்வொழிகாமன்தன் உபத்திரம்போக்கும்
உய்வொளி ஞானம் முத்தியும்நல்குமே

அயில் வேலுடனே புனமேயலைந்து
நயந்தாய்குறமாதினை நீகுமரா
செயமே விளங்கு திக்கரைச்சேயே
புயமீராறுடைய புண்ணியனே

குன்றேர்குளகா குஞ்சரிமணாளா
நின்றேநினைவோர் நலமேநிறைய
என்றோ வருவாயெனவேங்கடியார்க்
கன்றே கருணைக்கடைக்கண்ணருள்வாய்



விடையானுமையாள் மகனே விகிர்தா
நடையாலெமையாள் நளினமயிலோய்
தடையாயெமைப்பாழ்படுத்து பந்தொந்தம்
உடைத்தாள் படையாறுடையஅரசே

உனையே துணையென்றுலகில் உழலும்
எனைநீ கைவிடலெப்படித்தகுமோ
தினையாள் துணைவா தீரென்வறுமை
பனைச்சீர் பொலியும்திக்கைபகவனே

ஆலமேயுண்டான் அனல்விழி யீந்தோய்
பலம்நீ யென புரிந்தேன் பயமில்
இலமே பொலியும் திக்கரை இறைவா
நலமே தருவாய் நெடுமால் மருகா



உயிருக்குயிரே உடலுக்குரமே
செயலுக்குணர்வே செகத்திற்கரசே
வயலுக்கருகே விளைந்தமணியே
செயமுற்றுறவுன் சேவடி தருவாய்



வேதாவை குட்டி சிறையிட்ட வேலா
மாதாகை வேல்பெற்ற மைந்தாமுருகா
தோதான சகோதரா துணைநீயரசே
தாதாவென்றாடு தேசுபுள்மேல் வாவா


இம்மையில்வாழ்வ தெப்படி யென்றறியேன்
பொம்மலாட்ட வாழ்வு பொடியாகுமுன்னம்
செம்மலர் தாங்கியே சண்முகநாதனே
நம்பித்தொழுவாரை நாடிவந்தருளுதி

சூரனைமாய்த்தாய் சுரர்தொழுநாயகா
வீரபாண்டியனின் விளையாட்டுப்பிள்ளையே
சீராளுதிக்கரை உய்விக்கும் சேய்ந்தனே
வாரமிகு தமிழினம் வாழவருள்



உய்யும் வகையொன்றுமறியா எளியேன்
மெய்யாயுமையேமுழுதாயுணரேன்
தெய்வா உமையாள்தனயா திக்கரை
ஆய்மை நீயே அடைக்கலமளித்தாள்.

ஏக்கம் தீர்ப்பவா ஆக்கம் அளிப்பவா
தாக்கும் காமாதி கோபம் தகர்த்தெனை
ஊக்கமாகவே பாதம் பரவிட
சேர்க்கும் திருப்புகழிசைக்க அருள்சேர்



தாங்கித் தயைபுரி தண்டபாணியே
ஏங்கியிளைத்தேன் துணைக்கெவருமில்
மாங்குருபெற்ற சூரனைமாய்த்தவா
காங்கேய சுவாமி கடைக்கண் காட்டாய்

பாரில்பிறந்துழலும் பாவியேனுன்தன்
தேரிற்சுழலும் சில்வாய்சுழலலையே
யாரிப்பிறப்பை அறுக்க வல்லார்திக்கை
ஊரிற் கச்சா மலங்கார முருகனே



அமராதிபனே அடியார் மனம் வாழ்
இமவான்பேரா உகந்தா சினம்தீர்த்
தெமனோர்ஒருநாள் வருமே அந்நாள்வந்
துமதோர் நாமம் சொலவைத்தாள்கவே

பன்னிருகையா பைந்தமிழ்புலவனே
தன்னிகரில்லாத திக்கரைத்தேவனே
வன்முறையால் தமிழினம் வீதியிலே
இன்னலுற்றழிதலுனக்கே இழிவுகாண்

செந்தமிழின்தெய்வமென்றுன்னை சார்புற
முந்திய பெரியோர் மொழிந்தது பொய்யோ
கந்தா கதிர்வேலா திக்கரைக்கோவேயென்
அந்தக வாழ்வுக்கிரங்கயில் வேலவா



கட்ட பொம்மற் கபயமீந்தகுமரா
சுட்டகனி கேட்டு தமிழ்சுவைத்தநீ
நட்டமிடு நீலச்சிகண்டியில் வந்து
திட்டோடு நீக்கிதமிழினம் வாழவை

சக்தி சுதனே சரவணபவனே
சக்தியிருவரொடு சக்தி வேலேந்தி
திக்கற்றுலையும் தொண்டர்க்குதுணைசெய
திக்கரையின் கண் வந்தமர்துள்ளான்தேடு



பொய்யாமுடலில் பஞ்சப்பொறியார்
செய்திறனாலே உலைவது சரியோ
ஓய்தல் செய்த அருணகிரிக்கருள்
பெய்தாள் பிரானெனது பெத்தம்போக்கியாள்

அன்பொடாரும் அழுது கண்ணீர் விட்டு
தன்திருக்கழிலினில் தெண்டனிட்டிட
பின்னடி வந்தே பிழை பொறுத்தாள்வான்
கன்முகை வாசன் திக்கரைக்கந்தன்



கும்பிட்டெப்பல னென்றயர் கொளாதே
நம்பிக்கையொடு நாளும் நினைத்திட
நம்மிரு வினைகளை நடத்திட
தும்புறு திக்கையில் திகழ்கின்றானே

காசுதரும் கல்வி நற்குணம் தரும்
ஓசுதரும் அச்சமில் மனம் தரும்
மாசிலாயினம் தரும் திக்கை முருகன்
வாசிமிகு வெற்றித் திருவடிகளே

மனதுறு அழுக்கெல்லாம் மாற்றிட வகையுண்டே
அனலுறு கையனீந்த அறுமுக வள்ளல்
ஞானவேல் தாங்கி ஆனந்த நடமாடும்
ஏனல்விளை திக்கையிற்புரண்டமுவாய்



கண் கொடுத்தாய் கொஞ்சிட சேய் கொடுத்தாய்
பண் கொடுத்தாய் பஞ்சிதீர் பால்கொடுத்தாய்
ஊண் கொடுத்தாய் அஞ்சினோர்கோ் கொடுத்தாய்
ஆண்டவா கெஞ்சினேன் ஏது கொடுத்தாய்

பரிந்து கேட்க பிள்ளை வரமீந்து
பரிபெற்றேறி மகிழ்பெம்மானே
எரிசினம் போக்கி ஏற்றருள்வீரே
எரி கையரேந்திய எம்பிரானே



அறவேலுடனே வனமே அலைந்து
குறமாமகளேர் குமரா முருகா
திறமேர் திக்கைத் தவமே திருத்தாள்
மறவா நினைவோடிருக்க மகிழ்ந்தாள்

தற்பம சிந்தையன் தாரகன்திகைத்த
சிற்பர மூர்த்தி சிறுமைகள் சிதைக்க
நற்பதி திக்கரை நண்ணு நாதனிடம்
உற்ற குறைகளை சொல்லியழுதுயர்வாய்



சூரனை மாய்த்தாய் சுரர்கன்னியேற்றாய்
வாரணமுகனால் வள்ளியைப்பெற்றாய்
மாரணம் மீட்ட சிவனார் மகனே
காரண மீடேறகருணை தந்தாள்.

பேசாத பிள்ளையைப் பேசவைத்தாயே
ஆசார சீலரை நீ ஆடவைத்தாயே
கூசாமலேமடிப்பிச்சை கேட்டுண்டாயே
நீசார்ந்தால் நிறைவுறுமே நினைவெல்லாம்

இயலிசை நாடகபிரியனேயுன்
தயவுபெறவெத் தகுதியுமில்லேன்
ஆயினுமுனையே பாடுவதென்தொழில்
தாயினும் நல்ல தலைவனின்தனயா




அலைவாயரனே அடியார்க்கெளியாய்
மலையேர் பழனிப்பதியா பதம்தா
குலையா மனம்தா குறையில் வளம்தா
நிலையாய் திக்கையில் நிறைவாயமர்ந்தாள்

பாதம்பரவி புலர்மலர் தூவினேன்
காதல்பெருக கனிந்திசைபாடினேன்
சீதநாயகிதன் திக்கரைசெந்திலான்
ஓதருவின்பமும் சீரளித்தானன்றே



காலனைக் காலாலுதைவன் கருணை
வேலனையீந்தது வேட்கையைவீழ்த்த
கோலமா மஞ்ஞைமேற் குலவுகாந்தன்
நீலமேவு திக்கைநண்ணியாள்கின்றான்



நாயேனையோர் தொண்டனென நினைந்து
பேயேனைநின் பதத்தைபாடவைத்தாய்
தூயோனேதிக்கரை முருகாநின்தயை
சேயோன்பெறவேது செய்தேன் புண்ணியம்

வெள்ளி தோறுமுன் சன்னிதி வந்தன்பர்
கள்ளப்புலன்கள் ஒடுக்கிகாதலுற
தெள்ளிக்கோலி துப்பரவுசெய்தோர்க்கு
பிள்ளைவரமீந்த திக்கையா போற்றி

கார்த்திகைநல்விரதம் நோற்ற காதலர்
நேர்த்திகள் செய்து அன்னதானம்நிறைக்க
சீரகச்சிக்கல் சீர்செய்து செல்வமீந்த
வீரதிக்கரை சித்திரவேலனே வா




திக்கரை சந்நிதியில் கந்தசஷ்டி தினத்தில்
மிக்கவதானமாய் உபவாசம் மேற்கொள்
பக்தர்கள் பெற்ற பல்லனுக்கிரகத்தில்
இக்கயவனுக்கும் சிறிதளித்தாள்க

எந்தாய் தந்தையாய் தேசிகனாயிலங்கும்
நந்தாததிக்கரை நாயகா சரணம்
அந்தாதி இல்லாத அயில்வேலரசே
சிந்தா குலம் தீர்த்தெனையாள் செய்வதெப்போ



கடுஞ்சுரம்தொய்வு குட்டமொடுவாதம்
கொடுநீரிழிவு நெஞ்சடைப்பிருமல்
பிடித்துலகில் வருந்திடும் பொழுது
கடிதில்வந்து கா திக்கரை முருகா

தவளை மனமோதத்தித்திரியுதே
குவளை மலராள் குஞ்சரி கணவா
பலவினையாலே அழுந்திபதறி
அவதியுறா வண்ணம்ஆண்டருளாற்று



ஆண்டருளென்றே திக்கரையாலயத்தில்
பண்டுகாலமுதலாய் பவனிவரும்
மாண்பு மிகு முருகா மன்றாடும்தொண்டர்
வேண்டுதலை நிறைவுசெய்வாய் விரைந்து

முரசாயெம்நிலை சேவல்முன்மொழிய
விரைந்துவர நிலச்சிகண்டியுண்டே
கரவிலாத் திக்கரைசேர்கதிர்காமா
பரைசுதா சரஹணபவனேவா




பவனே வா சரவணபவ வா
சிவமே வா வரணபவசர வா
குகனே வா பவசரஹண வா
புகலே நீதான் திக்கரை பகவா

காரைநகர் சிவனார் மைந்தாகந்தா
தீரா் நிறை திக்கரை காவலனே
சீரைச்சிறப்பை செல்வத்தை செகத்திலெவ்
வூரவரும் பெற்றுய்ய நீ வாழ்கவே


வாழ்த்து

அஞ்செழுதானருள் ஆறெழுத்தானே
நெஞ்சழுத்தி நினைநினைந்திப்
பைந்தமிழ் புகழ் பாடிப்பணிவோர்க்கு
எந்தக்குறையுவாராது வாழ்த்தருளே



சீரைக்கார் வேதம் வாழ்க
சோவெனப்பெய் வானம் வாழ்க
சூரைவெல் குமரா
சாய சக்திகளோடு வாழ்க
நேரையோர் திருப்புகழ்வாழ்க
என்நாளும் வேல்வாழ்க
காரையூர்திக்கை வாழ்க
காவல்தருமுருன் வாழ்க

- x - x - x -



காரை நகர்

அருள்மிகு திக்கரை முருகன்

அபிடேகச்சிந்தாரம்



திக்கை முருகனை திருமுழுக்காட்டி
பக்தியாய் அபிடேக சிந்தினைப்பாட
தக்க தருணத்தில் தம்பிக்குதவிய
வக்ரதுண்ட விநாயகன்காப்பு

காரைநகர் திக்கரை முருகா
தீரையாளம் முறைபாடெலாம்
கூலமலம் கடிதறவே
காலமெல்லாம் உனைப்பணிந்தோம்
குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

பூமலிந்த சரவணத்தில்
பூத்தவுருவானவனே
பாவமெல்லாம் எமக்கொழிய
பாவநாசச்சுனைநீர் சிந்த
குளிர்ந்து நீராடி யருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

நீலமயிலேறும் திக்கரைவாசா
காலகாலன் மகனே எங்கள்
மூலாலமான அகங்காரம்மாள
பாலாவிப்பனிநீர் பெய்ய
குளிர்ந்து நீராடி யருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

சிவைசிவன் மைந்தா சிங்காரவேலா
கவலை மிகுந்து மன்றாடுமெங்கள்
பிணி நோய் மாறியின்பமுற
மாணிக்க கங்கை மருந்துநீரில்
குளிர்ந்து நீராடி யருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

குருபரனென அரனார்
மருவிய திக்கரை முருகா
தொழுவார் துயரற நீங்க
வழமார் கீரிமலை நீரில்
குளிர்ந்து நீராடி யருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

சீதாராமன் மருகோனே
நீதான்துணை என்றழுவோர்க்கு
திருவடி நிலையில் நீராடி
திருவடியீந்து துணைநின்று
சிறைமிடித் துன்பம் சிதைவித்து
கறைதீர்முருகா குளிர்ந்தாடு

வெடியரசனாண்ட களபூமி
நெடுமால் தேவி குபேரனொடு
அருளே பொழியும் திக்கரை யூரா
மாருதிவால் தீ அணைத்த
மாமாங்கத்தீர்த்தமாடி
சேமம் தருவாய் குளிர்ந்தாடு

உமையாள் கரத்தால் அயில்வேல் பெற்று
எமையாள்பவனே ஈர்முமுகவா
அன்னைக்காய் ராவணனாக்கிய
கன்னியா வென்னீர் தீர்த்தமாடி
சென்ன மரணபயம் நீக்கியாள்
பன்னிருகையனே குளிர்ந்தாடு

செம்மை மிகுந்த திக்கரையில்
அம்மையரோ டெழுந்தருள்வோய்
சந்ததமும் வந்தழிக்கும் சினமழிய
ஐந்து புலன் அடங்கவரு கண்ணீரில்
குளிர்ந்து நீராடி யருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

பித்தாய் உனையடைந்தோர்
சித்தமலம்மடிந்தகல
உள்ளக்களிம்பகற்றுதற்கு
எள்ளெண்ணை வார்த்திடுவோம்
குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

திருமருவும் திக்கைப்பதி
அருளோங்கு வேலையா
வாசி விளங்கிவீறடைய
தேசி தோடை சாறாட்ட
குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

கருவுற்றுப் பிறவாத கந்தப்பா
காருண்யா கலங்கியுன்னை
நீள நினைப்பவர் நானெனதடங்க
விளாம்பழச்சாறாட்டி வணங்க
குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

ஞானப்பழம் நீ ஆயிடினும்
ஞாலம் சுற்றி பழம் கேட்டாய்
காமகாஞ்சனக் கொடுமைநீங்க
தேமாங்கனிச்சாறாடி
குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

படையாறுடைய பெருமானே
கடையேன் உய்த்தடையான
அஞ்சு புலன்கள் பிசைந்துபட
பஞ்சாமிர்த முழுக்காடி
குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

தேன் புரையும் இன்மொழியாள்
வள்ளியணை திண்தோளா
பிறவி தொறும் இசைவுறவாழ
நறுந்தேனால் முழுக்காட்ட

குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

உன்பால் அன்பால் உளமுருகி
பண்பாடன்பர் மீடிதீர
வேலேந்தி விளையாடும் செவ்வழகா
பாலாட்டி முழுக்காட்டி புகழ்பாட

குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

அயில் வேலா அரோஹரா
அற்புத முருகா அரோஹரா
செயல்கள் திரையா செயமுறவே
தயிராலுன்னை முழுக்காட்ட

குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

தெய்வானை மகிழ் திவ்ய சொரூபா
மெய்யடியாரை தேடியருள்வோய்
வினை அவிந்தொழிந்திட அடியோம்
ஆன நறு நெய் சொரிந்தாட

குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

ஆனைக்கருளிய மாயோன் மருகா
ஞான மருளும் சற்குருநாதா
அறிவொளி பெற்று அறமுடன் வாழ
நிறைதரும் இளநீர் ஊற்றியாட்ட

குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

சிறுமைகள் நீக்கும் செஞ்சுடர் வேலா
வறுமைகள் போக்கும் வள்ளலே எங்கள்
கலியுக நோயெல்லாம் தீர்ந்திட
மூலிகை நீரினால் முழுக்காட்ட
குளிர்ந்து நீராடியருள்
குளிர்ந்து நீ ஆடியருளே

பங்கையச் செல்வியர் பரிவோடணைக்கும்
மங்கலை மகனே மாயை அகன்றிட
மங்களம் பொங்கி மனதுகளிப்புற
மங்கள மஞ்சள் நீர்முழுக்காடி
எங்கும் மங்களம் பொழிய
குளிர்ந்து நீ ஆடியருளே

சிதம்பரநாதன் செகமிது உய்ய
நுதல் விழி அருளிய நர்த்தனமயிலோய்
ஆசாபாசத் துயர் அகன்றிடவே
வாசனைத் திரவிய நீராட்ட
அழகா குமரா கடம்பாநீ
குளிர்ந்து நீராடியருளே

சந்தக் கவிமழை சிந்திப் புகழுரை
தந்த புலவர்பின் சென்றவனே
கருக்காலம் முதலன்பரை காத்தாள்வோய்
திருநீற்றாலுனை திருமுழுக்காட்ட
அருவா யுருவாய் அருவுருவானோய்
குளிர்ந்து நீராடியருளே


மாசற்ற வாழ்வருளி மேலானவீடளிக்கும்
தேசுற்ற மேனியனே திக்கரை முருகா
பாசவினை மாய்த்து பக்குவான்மனாய்
வாசசந்தனத்தால்திருமுழுக்காடி
வழிவழித்தொண்டனாய் வாழ
குளிர்ந்து நீ தண்ணருள்தா

எமையாள உமையாளின் சுதனாய் வந்து
ஊமைகளைப் பேசவைத்த திக்கரையா
நமைவாட்டும் கொடுங் கோலாட்சிவீழ
உமைமுழுக்காட்டினோம் குங்குமத்தால்
போராட வந்த எங்கள் பரமா
நீராடு நீராடுகுளிர்ந்து நீராடு



அன்நாளும் இன்நாளும் என்நாளுமெங்கள்
இன்னல்கள் தீர்த்தாளுமெம்பிரான் உன்னை
சென்மவினைபோக செல்வச்சீரோங்க
பன்னீர் கற்பூர நீரால்முழுக்காட்ட
வளமோங்க வாழ்வோங்கநித்தம்
குளிர்ந்தாடி இன்பமே சூழவருள்

சஷ்டியில் நோற்போர்க்கு சங்கடம் விலக்கும்
இஷ்ட தெய்வமான இபமுகன் சோதரா
என்னாளும் இல்லையென்னாத இன்பம்
அன்னாபிடேகத்தால் நிறைவுற
அப்பனே குளிர்ந்தாடியருளே
எப்போதும் நனிமகிழ்தாடியருளே



திக்கரையில் அமர்ந்துதிக்கெல்லாம் ஆண்டருளும்
திருமுருகா சரவணபவகுகனே வா வா
எக்கருமச் செய்கையிலும் எம்
பக்கத்துணை நீயே
அம்மை மாரி பாலகனே
எம்மிறைவா குளிர்ந்தாடு

செங்கமலத் தொட்டிலிலே
சீராக வளர்ந்தவனே
மங்களமாய் மண்ணக ஏணையிலே
மங்களமாய் ஆடுக நீ தாலேலோ
சுபமங்களமே சூழ்க தாலேலோ
சுபமங்களமே தாதாதாலேலோ



# திக்கரை முருகன்
## தேர்ச்சிந்து



தேர்வருகுது தேர்வருகுது காண்
ஊரவரெல்லாம் ஒன்றெனும் சத்திய
சீர்வடம் பற்றி இழுத்திடும் சித்ர
நேரசை வல்லமை தந்திட நம்முன்னே
(தேர் வரு)

மரகத விகசித ஒளிதவள் இருசிறை
மருவிய மயில்மிசை அனுதினம் உறை திரு
வாசன் பவநாசன் - எம்
நேசன் அமர்ந்தாளும்
(தேர் வரு)

பரவிடு மாடியவர் துயர்களை பகலவ
ஒளிநிகர் நிகழ்தரு முருகேசனருள் தரும்
கோலன் பரைபாலன்
சீலன் திக்கைஊரன்
(தேர் வரு)



நவமணி அணிகல கலவென ஒலிநிறை
குவலய சரதரன் எனும் மத னனும் மகிழ்
தேவன் திக்கை வேலன்
ஈவன் நலம் அந்தோ
(தேர் வரு)

அசுரரை சிலை மகன் நொடிதனில் எரிசெய்த
வசிகர நகையொடுவணங்கிடுமடியரை
சூழும் வினை வீழ்த்தி
வாழ்த்த முருகேசன்
(தேர் வரு)

எது வர மருளிட கனக நிதியுமெழில்
பரவிய சுரபியும் உறுசுரர் புரன்மகள்
பாகன் திக்கை பாலன்
வேகம் போக்கும் லோலன்
(தேர் வரு)

சததள நளினத விசுமிசை அமரொரு
சதுர்முக விதிசிறை அதிலுற நிறு வி
சாகன் திக்கைச் சேய்ந்தன்
மோகன் எங்கள் மெய்யன்
(தேர் வரு)

காரை சிதம்பரநாதன் உதவிய சரவண
பவன் அறுமுக குகனது தேரசை இசைவினை
பாடு சுகம் கூடும்
தேடு அவன் பாதம்
(தேர் வரு)








# வேலுண்டு
# வினை தீர்க்க
# மயிலுண்டு
# எமைக்காக்க







# சண்முகா சரணம்



Type setting & printad by Kiri Com: Digitil Printers Batticaloa.- 065 - 2224715

# நூலாசிரியர்



சிவஹரிகதாவாரி

உபன்னியாசமணி

முத்தமிழரசு

சிவயோகச் செல்வர்

த.சாம்பசிவசிவாச்சாரியார்(B.Com)

மட்டக்களப்பில்

## என்றும் சைவப் பணியில்
## ஓங்கும்



காரைநகரைச் சேர்ந்த

ஸ்ரீமான் கா.சண்முகம் குடும்பத்தினர்

## வளர அருள்
## தந்த திக்கரை முருகா சரணம்

கிரி கொமினிகேசன், மட்டக்களப்பு